


**14.03.2022**

## 3. சண்டையா? நீங்கள் ஜெயித்திடலாம்!

'அக்கம் பக்கத்தாரிடம் சண்டை! அலுவலகத்திலும் சண்டை! சொந்த பந்தங்களில் சண்டை! ஏன்.... உங்கள் வீட்டிலும் சண்டை! இவை அனைத்திலும் நீங்கள் ஜெயம் பெறுவது எத்தனை நிம்மதி.... எத்தனை பாக்கியம்! இரகசியம் கேளுங்கள்: வேதம் யாக்கோபு 4:2 கூறுகிறபடி 'நமக்குள்தான்' சண்டையும் யுத்தமும் வாசமாய் உள்ளது! 'நாம் தகாதபடி ஜெபித்தால்' அதாவது 'என்னோடு சண்டையிடுகிறவர்கள் ஒழியட்டும்' என்ற உங்கள் ஜெபத்தை தேவன் கேளார் (வச.2). இதற்கு மாறாக, தேவனை அண்டி, "எனக்குள் குடிகொண்டிருக்கும் சண்டை ஒழியட்டும்" என கர்த்தரிடம் ஜெபித்தால், அவர்களே தாழ்மை உள்ளவர்கள்" அவர்களுக்கு கர்த்தர் அதிக கிருபை தருவார்!" (வச.6). அவரது கிருபை பெற்றதினிமித்தம் உங்களுக்குள் சண்டை ஓய்வதால், வெளியேயும் சண்டை ஓயும்! அதை கர்த்தரே செய்வார்! அல்லேலூயா!!

– ரத்னம்